# நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணம் தொடர்பான தேசிய ஆலோசனைச் சபையினால் தயாரிக்கப்பட்டது.**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
மற்றும்
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால்
அமுல்படுத்தப்படுகின்றது.

# நிர்மாணம் தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் அதனை அமுல்படுத்தல்

**உள்ளடக்கம்**


1.0 அறிமுகம்

2.0 சூழமைவும், பின்னணி மீளாய்வும்

- 2.1 கொள்கைசார் ஆரம்பம்
- 2.2 செயற்பாட்டு அடிப்படைகள்
- 2.3 கொள்கைசார் சூழமைவு
- 2.4 சட்டரீதியான சூழமைவு
- 2.5 அபிவிருத்திச் சூழமைவு
- 2.6 பொருளாதாரத்தில் அதன் வகிபாகம்
- 2.7 பிரதான தரப்பினர்கள்

3.0 கொள்கைசார் அடிப்படை அம்சங்கள்

- 3.1 நோக்கு
- 3.2 கொள்கைசார் நோக்கங்கள்
- 3.3 கொள்கைசார் இலக்குகள்

4.0 நிர்மாணம் பற்றிய தேசிய கொள்கையும் அதனை அமுல்படுத்தலும்

- 4.1 அரச துறையின் பொறுப்புக்கள் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறை
- 4.2 கைத்தொழில் துறையின் பொறுப்புக்கள் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறை

5.0 ஏனைய தொடர்புடைய அரசாங்கக் கொள்கைகள்

6.0 நிறைவு

## 1.0 அறிமுகம்

1.1. நிர்மாணக் கைத்தொழிலானது தேசிய பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பைச் செய்வதோடு பிரதான தொழில் உருவாக்கும் துறையாகவும் காணப்படுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலின் முன்னைய மற்றும் பின்னைய தொடர்புகள் காரணமாக மேற்படி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டில் பல மடங்கு பெறுபேறுகளை உருவாக்குவதுடன், இது நிலையான தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் காரணமாக அமையும்.

எனவே, முழுமையான அணுகுமுறையின் அடிப்படையில் நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தியை எதிர்பார்க்கின்ற நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கையின் தேவை அவசியப்படுகின்றது.

1.2. 2014 டிசம்பர் 29 ஆம் திகதி ஆக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தினால் நிர்மாணக் கைத்தொழிலை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வது பற்றி ஆலோசனை வழங்குவதற்காக நிர்மாணம் தொடர்பான தேசிய ஆலோசனைச் சபையைத் (நி.தே.ஆ.ச.) தாபிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான விடயங்கள் மற்றும் அதன் நோக்கங்களைக் கொண்ட நிர்மாணம் தொடர்பான தேசியக் கொள்கையைத் தயார் செய்வதற்கான அதிகாரம் சட்டத்தின் கீழ் இச்சபைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1.3. கொள்கையின் நோக்கமாக இருப்பது யாதெனில்,ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல், திறன் விருத்தி மற்றும் வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் தேசிய அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வினைத்திறன்மிக்க நிர்மாணக் கைத்தொழிலை இலங்கையில் உருவாக்குவதாகும்.

1.4. அரசதுறை மற்றும் தனியார் துறை சம்பந்தப்பட்டுள்ள நிர்மாணக் கைத்தொழிலுக்கு பொதுவாக இந்தக் கொள்கை ஏற்புடையதாக இருக்கும். கைத்தொழிலின் பல்வேறு பிரிவுகள் மற்றும் நிரல் அமைச்சுக்களின் பிரதான செயற்பணிகள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளன. பூரணத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவற்றின் செயற்பாட்டுப் பின்னணி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகளுடன் ஒருங்கிணைக்கப்படும்.

1.5. தேசிய பொருளாதாரத்தில் அதன் வகிபாகம் மற்றும் பொருளாதாரத்தின் பல்வேறு உப பிரிவுகள் தொடர்பிலான அதன் தாக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் அதன் செயற்பாடுகளில் பங்கேற்கின்ற பல்வேறு தரப்பினர்களை கவனத்தில் கொள்ளும் போது தேசிய நிர்மாணக் கைத்தொழிலை பிரதிநிதித்துவம் செய்வதற்கு சிக்கலான இடையீட்டுச் செயற்பாட்டு முறையொன்றுதோற்றம் பெருகின்றது. ஏதேனும் தேசிய கொள்கையொன்று இந்த சிக்கலான செயற்பாட்டு முறையில் தாக்கம் செலுத்துகின்ற சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

1.6. நிர்மாணம் தொடர்பான தேசிய ஆலோசனை சபையின் சிபாரிசுடன் நிர்மாண விடயத்திற்குப் பொறுப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற இக்கொள்கை அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் செயல்வலுப்பெறும்.

1.7. நிர்மாணம் தொடர்பான இந்தத் தேசியக் கொள்கை, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 2(1) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது.

## 2.0 சூழமைவு மற்றும் பின்னணி மீளாய்வு

2.1 இக்கொள்கையின் முன்னெடுப்புக்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்.

i. மனித வள அபிவிருத்திக்கான உதவி
ii. தொழில் உருவாக்கம், வறுமையை ஒழித்தல் மற்றும் சமூக அபிவிருத்திக்கு நிர்மாணத்துறையை இலக்காகக் கொள்ளல்.
iii. உள்நாட்டு மூலப்பொருட்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் மற்றும் தளர்த்தப்பட்ட வியாபாரம் ஊடாக பொருட்கள், உபகரணங்கள், பொறிகள் காணப்படுவதை உறுதி செய்தல்.
iv. அதிகாரமிக்க ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை உருவாக்கல்.
v. தெளிவான பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தாபிப்பதன் மூலம் அரசாங்க ஒப்பந்தங்களுக்கு நியாயமான போட்டியை ஏற்படுத்தல்.
vi. நி.கை.அ.அ.ச. ஊடாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கான தேசிய பதிவேட்டை தாபித்தல்.
vii. தனியார் மூலதனம் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்களாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழலை உருவாக்கல்.

2.2 **நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான கொள்கையை கட்டமைப்பதற்காகப் பயன்படுத்தப்படுத்தப்படும் செயற்பாட்டு அடிப்படைகள்:**

i. மூலோபாய முறையிலான தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்கு வசதிகளைச் செய்தல்
ii. அரச மற்றும் தனியார் துறையின் பங்குடைமைக்கான வசதிகளைச் செய்வதும், அபிவிருத்தியும்.
iii. பொருத்தமான நிறுவன ஒழுங்கமைப்பின் ஊடாக போதியளவான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
iv. கைத்தொழிலின் செயலாற்றுகை பற்றிய விளைதிறன்மிக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்
v. தாபிக்கப்படுகின்ற வழிகாட்டல்கள், நன்னடத்தைக் கோவை மற்றும் நியமங்களுடனான இசைவுத்தன்மை மற்றும் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்
vi. பாதகமான சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்வதை உறுதி செய்தல்.
vii. பெறுகைச் செயன்முறையில் போட்டித்தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்தல்.
viii. தனியார் துறையின் முதலீடுகள் மற்றும் தொழில்முயற்சிகளுக்கு வசதிகளை செய்யும் சமூக மற்றும் பொருளாதார சூழலை உருவாக்கல்.
ix. தேசிய நிர்மாணக் கைத்தொழில் தொடர்பில் அரசின் பணிகள் மற்றும் முன்னுரிமைகளைத் தாபித்தல்.
x. கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை சர்வதேச சான்றுப்படுத்தும் மட்டத்திற்கு உயர்த்துவதற்கான பயிற்சி நியமங்களை மேம்படுத்தல்

xi. இலங்கையில் கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து உள்நாட்டு நிர்மாணக் கைத்தொழிலுக்கான தொழில்நுட்பத்தை பொறுப்பளிப்பதை மேம்படுத்தல்.
xii. நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான சேவைகளின் ஏற்றுமதியை மேம்படுத்தல்.

## 2.3 கொள்கைசார் சூழமைவு

அரசதுறை மற்றும் தனியார்துறை சம்பந்தப்பட்டுள்ள, நிர்மாணக் கைத்தொழிலுக்குப் பொதுவாக இந்தக் கொள்கை ஏற்படையதாக இருக்கும். செயற்பாட்டுப் பின்னணியில் உள்ள அமைச்சுக்களின் பிரதான செயற்பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன. அத்தகைய செயற்பாடுகளின் ஏற்புடையதன்மையை உறுதி செய்வதற்காக, இந்தக் கொள்கை மூலம் குறித்த செயற்பாடுகள் மேற்படி அமைச்சுக்களுடன் ஒருங்கிணைக்கப்படும்.

அரசதுறை – தேசிய நிர்மாணக் கொள்கை மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறை தொடர்பில் அமைச்சுக்களின் பிரதான செயற்பணியும், பொறுப்புக்களும் பின்வருமாறு.

i. கொள்கையை அமுல்படுத்தல், வழிகாட்டல்களைத் தயார் செய்தல் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதை கண்காணிப்புச் செய்யும் பொறிமுறையைத் தாபிப்பதற்காக நிர்மாண விடயத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சு ஏனைய சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
ii. வழங்கல் மற்றும் ஏனைய தொடர்புடைய நிதி மற்றும் பொருளாதார கொள்கைகள் பற்றிய கொள்கைகள் தொடர்பாக நிதி அமைச்சு பொறுப்புக்கூறல் வேண்டும்.
iii. காணி, பௌதீக திட்டமிடல் மற்றும் சுற்றாடல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு, பௌதீக திட்டமிடல் மற்றும் சுற்றாடல் கொள்கைகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் வேண்டும்.
iv. தொழில் சட்டங்கள் மற்றும் ஏற்புடைய கொள்கைகள் தொடர்பாக தொழில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுப் பொறுப்புக்கூறல் வேண்டும்.
v. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளுக்கு கல்வி, உயர் கல்வி, திறன் விருத்தி மற்றும் தொழில் பயிற்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் பொறுப்புக்கூறல் வேண்டும்.
vi. நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும்.
vii. மின்சக்தி,வலுச்சக்தி மற்றும் தொலைத்தொடர்பு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும்.
viii. போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும்.
ix. கரையோரப் பாதுகாப்பு, நீர்பாசனம், காணி மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள் அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும்.

x. அனர்த்த முகாமைத்துவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுக்கள் அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும்.

## 2.4 சட்டரீதியான சூழமைவு

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டம் நிர்மாணம் தொடர்பான தேசிய ஆலோசனைச் சபையைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது. நிர்மாணிப்பு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் அதனை அமுல்படுத்தும் பொறிமுறையை மேற்படி சபை தயார் செய்ய வேண்டுமென்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்மாணம் தொடர்பான மேற்படி தேசிய கொள்கை, மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படுகின்ற நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் மேம்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும்.

## 2.5 அபிவிருத்திச் சூழமைவு

நிர்மாணக் கைத்தொழில் நேரடியாக பொருளாதாரத்தின் பெரும்பாலான உப துறைகளின் தேவைகளை நிறைவு செய்கின்றது. நிர்மாணக் கைத்தொழிலின் வினைத்திறன், செலவினம் உற்பத்தித்திறன்மிக்கதாகும் போது மற்றும் உரிய நேரத்திற்கு பணிகள் நிறைவேற்றப்படும் போது இந்த உப துறைகளின் மூலம் பொருளாதாரத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பு தெளிவாக உணரப்படும். கருத்திட்டத்தை உருவாக்குவது முதல் நிறைவு செய்யப்பட்ட வசதிகளின் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு வரை நிர்மாணக் கைத்தொழிலின் செயற்பாட்டு நடடிக்கைகள் பல காணப்படுகின்றன. தொழில்நுட்பவியலுக்கு அமைய நோக்கும் போது உள்நாட்டு அறிவுக் கட்டமைப்புக்களிலிருந்து அதிநவீன முறையியல்கள் வரையான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். ஆட்களினால் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் அரச, தனியார் துறையின் பாரியளவிலான அமைப்புக்களினால் ஒப்பந்த அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களும் இதில் உள்ளடங்கும்.

## 2.6 பொருளாதார வகிபாகம்

மொத்தத் தேசிய உற்பத்தியில் கனிசமான விகிதத்துக்கு பங்களிப்புச் செய்து மற்றும் கைத்தொழில் துறையின் பிரதான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி நிர்மாணக் கைத்தொழிலானது தேசிய பொருளாதாரத்தின் அத்தியாவசிய செயற்பணியை நிறைவேற்றுகின்றது.

நிர்மாணக் கைத்தொழில் ஊடாக தேசிய அபிவிருத்திச் செயன்முறையின் பெரும்பாலான பிரிவுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. தேசிய பொருளாதாரத்தின் நிலையான விருத்திக்கு வழிகளை திறக்கின்ற முந்திய மற்றும் பின்னரான தொடர்புகள் இதற்குக் காரணமாக அமைகின்றன.

## 2.7 பிரதான தரப்பினர்கள்

நிர்மாணக் கைத்தொழிலின் பங்காளர்களாக பல்வேறு தரப்பினர்கள் சம்பந்தப்படுகின்றனர். முதலில் வேலைகளை உருவாக்குகின்ற முதலீட்டாளர் அல்லது அபிவிருத்தியாளர் உள்ளார். இத்தகைய வேலைகளை தயார் செய்து திட்டமிடுபவர்களாக திட்டமிடலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், கனிய அளவையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள்

மற்றும் நிதி ஆலோசகர்கள் போன்ற நிபுணத்துவ தொழில்வல்லுனர் குழுக்கள் காணப்படுகின்றனர்.

ஒப்பந்ததாரர்கள், நிர்மாணப் பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், வழங்குனர்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை வழங்குவோர், வாடகைக்கு வழங்குவோர் மற்றும் நிர்மாணக் கலைஞர்கள் பௌதீக வசதிகளுக்கு பங்களிப்புச் செய்கின்றனர்.

கொள்கை வகுப்பாளர்கள், தரநியமங்களை ஒழுங்குபடுத்துவோர், கல்வி, பரிசீலித்தல் மற்றும் பயிற்றுவிக்கும் அமைப்புக்கள், தொழில்வாண்மை நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புக்கள் போன்றனவும் தமக்குரிய வகிபாகங்களை நிறைவேற்றுகின்றன.

அதற்கமைய, நிர்மாணக் கைத்தொழிலை பிரதிநிதித்துவம் செய்வதற்கான சிக்கலான இடைத்தொடர்ப்பு செயன்முறை உருவாகின்றது. எந்தவொரு தேசிய கொள்கையும் இந்த சிக்கலான இடைதொடர்புச் செயன்முறை தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற சகல சிக்கல்களுக்கும் தீர்வை வழங்க வேண்டும்.

## 3.0 கொள்கைசார் அடிப்படை அம்சங்கள்

### 3.1 நோக்கு

பூகோள தரநியமங்களுக்குஇசைவான ஒழுங்குறுத்தல் மற்றும் தரநியமங்கள் ஊடாக பொருளாதார அபிவிருத்தியின் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கையில் வினைத்திறன்மிக்க நிர்மாணக் கைத்தொழிலை அடைந்துகொள்ளல்.

### 3.2 கொள்கைசார் நோக்கங்கள்

நிர்மாணக் கைத்தொழிலின் சகல தரப்பினர்களுக்கும் உபாயமுறையிலான தலைமைத்துவத்தை வழங்குதல், நிலையான வளர்ச்சிக்கு மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துவதை ஊக்குவித்தல், குறைந்த செலவினம் மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான தொழில்நுட்பம், கட்டிடப் பொருட்கள் மற்றும் கட்டமைப்புக்களை மேம்படுத்தல், உகந்த ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தல் மற்றும் வெளியிடல், தரநியமம், ஒழுக்க விதிகள் மற்றும் உபயோகத் தொகுப்பைத் தயார் செய்தல் மற்றும் நிர்மாணச் சேவைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவது இந்தக் கொள்கைகளின் நோக்கங்களில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கொள்கைசார் இலக்குகள்

கொள்கைசார் இலக்குகள் பின்வரும் விடயங்களை இலக்காகக் கொள்ளல் வேண்டும். நிர்மாணக் கைத்தொழிலின் செயற்பாடுகளை ஒழுங்குறுத்தல் மற்றும் தரப்படுத்தல், சம்பந்தப்பட்ட தரப்பினர்களை பதிவு செய்தல், கைத்தொழில் தொடர்பான தொழில்கள் மற்றும் ஊழியர்களின் அபிவிருத்தி மற்றும் சிறந்த நிலைத்திருத்தலுக்கான நடவடிக்கைகள், மிகவும் இலாபகரமான மற்றும் துரிதமாக பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் மற்றும் நிர்மாணிப்புப் பணிகளின் போது மக்களின் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் உறுதி செய்தல்.

## 4.0 நிர்மாணம் பற்றிய தேசிய கொள்கை

### 4.1 அரச துறையின் பொறுப்புக்கள் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறை

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 1 – நிர்மாணத் துறையின் நிலையான அபிவிருத்தி, புனரமைப்பு மற்றும் மேம்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக நிர்மாணக் கைத்தொழிலின் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உபாயமுறையிலான தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*கொள்கை மட்டத்தில் ஒருங்கிணைப்பு அணுகுமுறையை உறுதிசெய்வதற்காக நிர்மாணிப்பு தொடர்பான தேசிய ஆலோசனைச் சபை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை,அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர்கள் மற்றும் நிர்மாணிப்பு, உட்கட்டமைப்பு வதசிகளை செய்கின்ற மற்றும் நிதியீட்டலில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் துறையின் ஏனைய அமைப்புக்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 2 — அவ்வப்போது சிபாரிசு செய்வதற்கு இடமுள்ளவாறு நிர்மாணக் கைத்தொழிலின் சகல தரப்பினர்களினதும் செயற்பாடுகளை ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை அரச துறையின் ஏற்புடைய முகவர் நிறுவனங்கள் மற்றும் தொழில்வல்லுனர் அமைப்புக்களிடம் உசாவி :-*

i. *வழிகாட்டல்களை மீளாய்வு செய்து மற்றும் இற்றைப்படுத்தி சகல தரப்பினர்களையும் பதிவு செய்கின்ற மற்றும் கண்காணிப்புச் செய்கின்ற முறையொன்றை அமுல்படுத்தப்படும்.*
ii. *அரச மற்றும் தனியார் துறைக்கு இடையே, நியம வழங்கல் ஆவணங்கள் (கேள்வி) மற்றும் அவ்வாறான ஏனைய வழிகாட்டல்கள் மற்றும் வெளியீடுகளை ஒரே வகையில் ஏற்புடைதாக்குவது உறுதிசெய்யப்படும்.*
iii. *பிணக்குகளைத் தீர்த்து வைக்கின்ற மாற்று முறையியல்கள் மற்றும் தேவையான சட்டங்களைத் தாபித்தல் மற்றும் மேம்படுத்தவதன் மூலம் நிர்மாணிப்பு தொடர்பான பிணக்குகளை விளைதிறனுடனும் துரிதமாகவும் தீர்க்கப்படுவது உறுதி செய்யப்படும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 3 — அனர்த்தங்களைத் தாங்கிக்கொள்ளும், குறைந்த செலவின மற்றும் சுற்றாடல் ரீதியாக நிலையான கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை திட்டமிடல் மற்றும் மேம்படுத்துவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான பொருாதார வளர்ச்சியை மேம்படுத்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*அனர்த்தங்களைத் தாங்கிக்கொள்ளும், குறைந்த செலவின மற்றும் சுற்றாடல் ரீதியாக நிலையான கட்டிட நடைமுறைகளை தயார் செய்வதற்காக உரிய தொழில்வல்லுனர்களின் நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புக்கள் மற்றும் பல்கலைக் கழகங்களிடம் உசாவி அளவுகோள்கள் மற்றும் வழிகாட்டல்களைத் தாபிப்பதற்காக நிர்மாணம்,அனர்த்த முகாமைத்துவம்,மின்சக்தி, எரிசக்தி மற்றும் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சுக்கள் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 4 – நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் தொடர்பான புத்தாக்கம், ஆராய்ச்சி, ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பான தகவல்களை பிரச்சாரம் செய்தல் மற்றும் வெளியீடுகளை மேம்படுத்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*கைத்தொழில் துறையிலுள்ள பாரிய நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள், சர்வதேச அமைப்புக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு இடையிலான ஒத்துழைப்புடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் மூலப்பொருட்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பம் பற்றிய"புவியியல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் திட்டங்கள்"துறை தொடர்பாக குறிப்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊக்குவிக்கப்படல்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 5 – நிர்மாணக் கைத்தொழிலுக்கான தேசிய தரநியமங்கள் மற்றும் வகைப்படுத்தல்களை தாபித்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*இலங்கை கட்டளைகள் நிறுவனம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உசாவி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தரநியங்கள் மற்றும் தேசிய தரவகைப்படுத்தல்கள், நிர்மாணப் பொருட்களின் உற்பத்திசார் இயைபுத் தரநியமங்களை உள்ளடக்கிய வகையில் தயார் செய்யப்பட்டு மேற்படி தரநியமங்கள் மற்றும் வகைப்படுத்தல்கள் கட்டாயமாக அல்லது சுயமாக வகைப்படுத்தும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 6 – நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஏற்புடைய சிறந்த பரீட்சயத்தை மேம்படுத்துவதற்காக நன்னடத்தைக் கோவை, பரீட்சயங்கள், நடைமுறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஆவணமயப்படுத்தலைதாபித்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, வர்த்தக சங்கம் உள்ளிட்ட சகல தரப்பினர்கள் மற்றும் தொழில் வல்லுனர் நிறுவனங்களிடம் உசாவி பொருத்தமான நன்னடத்தைக் கோவை மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பரீட்சயங்களைத் தயார் செய்யும். பொறுப்புக்களை புறக்கணிப்பதற்கு எதிராக உரிய சந்தர்ப்பங்களில் உகந்த தடைஏற்படுத்தல்கள் செயன்முறையில் உள்ளடக்கப்படும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 7 – நிர்மாணக் கைத்தொழிலின் மனித வள மூலதனம், தொழில்வான்மை, வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாணத்துறை அமைச்சு, கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் மற்றும் தொழில்வல்லுனர்களிடம் கருத்துக்களை உசாவி:*

*i.* *கைத்தொழிலின் மனிதவலுப் பற்றாக்குறைக்குத் தீர்வு வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயார் செய்யப்படும்.*

*ii.* *தொழில்வல்லுனர்களின், தொழில்நுட்ப அலுவலர்களின் மற்றும் கலைஞர்களின் செயலாற்றுகையின் தரம் மேம்படுத்தப்படும்.*

*iii.* *கைத்தொழிலின் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மேம்படுத்தப்படும்.*

*iv.* *கைத்தொழிலிலுள்ள ஆட்களுக்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களின் நற்பெயரைக் கட்டியெழுப்பல் மற்றும்*

*v.* *நடத்தைக் கோவை ஊடாக சிறந்த பரீட்சயங்கள் மற்றும் தரநியமங்களை ஊக்குவித்தல்*

*மனித வள அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் பின்வரும் நோக்கங்களுடன் அமுல்படுத்தப்படும்.*

*அ. கைத்தொழிலில்துறையின் தொழில்வாய்ப்புக்களுக்கு பெண்களுக்கு வாய்ப்பளித்தல்.*

*ஆ. விசேட தேவைகளையுடைய குழுக்களுக்கு வாய்ப்பளித்தல்.*

*இ. ஊழியர்களுக்கு முறையான ஊழியத்தை உறுதிசெய்தல்.*

*ஈ. கைத்தொழிலிலுள்ள ஆட்களுக்கு முறையான அங்கீகாரம் மற்றும் அவர்களின் நற்பெயரைக் கட்டியெழுப்பல்.*

*உ. பயிற்றப்பட்ட ஊழிய அபிவிருத்திகான வசதிகளைச் செய்தல் மற்றும் கைத்தொழிலின் பயிற்றப்படாத ஊழியப் படையை படிப்படியாக பயிற்றுவித்தல் மற்றும் தொழில் மற்றும் உப ஒப்பந்த முறையியலை ஒழுங்குறுத்தல்.*

*ஊ. நிபுணத்துவம் மற்றும் பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கான அங்கீகாரம் மற்றும் சான்றுப்படுத்தலுக்கான வசதிகளை செய்துகொடுத்தல்.*

*எ. பதிவு செய்யப்ட்ட ஒப்பந்ததாரர்களின் சேவைப் படையணியின் தேசிய தொழில்வாண்மைத் தகைமையைக் கொண்ட குறித்த ஆகக் குறைந்த நிர்மாணப் பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கு தொழில்வாய்பைப் பெற்றுக்கொடுத்தல்.*

*ஏ. பதவியணிக்கு அபாயக் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நலன்களை மேம்படுத்தல்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 8 – நிர்மாணக் கைத்தொழிலின் தொழில்சார் அந்தஸ்தைப் பாதுகாத்தல் மற்றும் சுகாதார தரநியமங்களை மேம்படுத்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது:*

*i.* *நிர்மாணப் பதவியணியினருக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய தரநியமங்கள் உறுதிசெய்யப்படும்.*

*ii.* *சகல நிர்மாணக் கருத்திட்டங்களினதும் வேலைத்தளங்களில் குறித்த பாதுகாப்பு முகாமைத்துவ திட்டங்கள் அல்லது அசௌகரியங்கள் அற்ற வேலை முறையியலைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவது பற்றிய நடைமுறைகளுக்கான வசதிகள் செய்யப்படும்.*

*iii.* *சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய துறைகளின் ஊழியர்களின் பயிற்சியை ஊக்குவிப்பதன் மூலம் நிர்மாண நடவடிக்கைகளை அபாயமற்றதாகவும்சுகாதாரத்திற்கு பாதகமற்ற நிலைக்கு மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் பொருள்கோடப்படும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 9 – நிர்மாணக் கைத்தொழில் செயற்பாடுகளில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவதை விருத்தி செய்தல்.**

அமுல்படுத்தும் பொறிமுறை

*குறித்த முகவராண்மை நிறுவனங்களுடன் இணைந்து நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை பின்வரும் விடயங்களை இனங்கண்டு மேம்படுத்தும்.*

i. *நிர்மாணக் கைத்தொழிலின் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல், மதிப்பீடு செய்தல், செலவினக் கட்டுப்பாடு, ஆவணமயப்படுத்தலும், தொடர்பாடலும், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நிருவாகம் போன்வற்றின் போது பொருத்தமான தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமைகளைப் பயன்படுத்தல்.*
ii. *நிர்மாணக் கைத்தொழிலின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத்தை கூடுதலாகப் பயன்படுத்தல்.*
iii. *வளங்கள், கருத்திட்டங்கள், கைத்தொழிலின் பங்காளர்கள், கைத்தொழில் துறை தொடர்பான தகவல்களுடன் இந்தக் கொள்கையை அமுல்படுத்தும் போது கைத்தொழிலின் வியாபிப்பு பற்றிய புள்ளிவிபரத் தரவுக் கட்டமைப்பைத் தாபித்தல்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 10 – நிர்மாணக் கைத்தொழில் மற்றும் பதவியணியினர் வெளிநாட்டுச் சந்தையில் பிரவேசிப்பதை மேம்படுத்தல்**

அமுல்படுத்தும் பொறிமுறை

*வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கள், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் ஒத்துழைப்புடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது, நிர்மாணத்துறை அமைச்சின் ஊடாக:*

*i.* *இலக்கிடப்படும் நாடுகளின் வேலைவாய்ப்புக்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான வலையமைப்பு தாபிக்கப்படும்.*
*ii.* *உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு அவ்வாறான வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விளைத்திறன்மிக்க சூழலை உருவாக்கல்.*
*iii.* *உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு வெளிநாட்டு வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்கான மேம்படுத்தல் முயற்சிகளுக்கான வசதிகளைச் செய்துகொடுத்தல்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 11 – நிர்மாணக் கைத்தொழிலின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு இயலச்செய்யும் சூழலை உருவாக்கல்.**

அமுல்படுத்தும் பொறிமுறை

*நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஏனைய ஒழுங்குறுத்தல் அதிகாரிகள் மற்றும் அங்கீகரிக்கும் முகவர் நிறுவனங்களுடன் இணைந்து:*

*i.* *நிர்மாணக் கைத்தொழிலின் முதலீடுகள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அங்கீகரிக்கும் செயன்முறையை மேம்படுத்தவதற்கும் துரிதப்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்ற மறுசீரமைப்புக்களைத் தாபித்தல்.*

*ii.* *தேவையான ஆற்றல்களுடன் புதிய தொழில்முயற்சிகள் மற்றும் சேவை வழங்குவோரை வளர்த்தல் மற்றும் அபிவிருத்திக்கான வசதிகளை செய்துகொடுத்தல்.*

*iii.* *தனியார் துறை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து நிர்மாண மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு முதலீட்டாளர்களை கவர்ந்தெடுப்பதற்கான பொறிமுறையை தாபித்தல்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 12 – தேசிய நிர்மாணக் கொள்கை ஏற்புடையதாக அனர்த்தங்களைத் தாங்கிக்கொள்ளும் நிர்மாணிப்பு தரநியமங்கள் மற்றும் பரீட்சயங்கள் உள்ளடங்களாக கைத்தொழிலில் பரீட்சயங்களின் இசைவுத்தன்மையை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைமுறையை தாபித்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை:*

*i.* *நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கையுடன் நிர்மாண நடவடிக்கைகள் இசைவுறுவதை உறுதி செய்துகொள்வதற்காக மேற்படி செயற்பாடுகள் பற்றிய கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடும் கட்டமைப்பு தாபிக்கப்பட்டும்.*

*ii.* *வெற்றிகள் மற்றும் புதிய தொழில்முயற்சிகளின் வளர்ச்சி தொடர்பான தரவுகள் உள்வாங்கப்படல்.*

*iii.* *நிர்மாணக் கைத்தொழிலுக்கு செலுத்த வேண்டிய ஒப்பந்தக் கொடுப்பனவுகள் உரிய நேரத்திற்குள் செலுத்தப்படுவதை உறுதி செய்தல்.*

*iv.* *அனர்த்தங்களைத் தாங்கிக் கொள்ளும் நிர்மாணிப்பு பரீட்சயங்கள் மற்றும் கட்டமைப்புக்களுடன்இசைவாக்கமடையும் பொருட்டு மற்றும் ஒழுங்குவிதிகள், பிரச்சனைகளுக்குக் காரணமாகின்ற பிரதேசங்களின் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினால் வெளியிடப்படுகின்ற அனர்த்த அபாய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அமைய செயற்படுவதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பு தாபிக்கப்படும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 13 – வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசகர்களினால் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நிதி வழங்கப்படுகின்ற நிர்மாணக் கருத்திட்டங்களின் உள்நாட்டு பங்பளிப்பை மேம்படுத்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி வழங்கும் போது மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்கள் மற்றும் வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களினால் அமுல்படுத்துவது அவசியமாகின்ற போது உள்நாட்டு நிர்மாணக் கைத்தொழிலின் தொழில்நுட்பஒப்படைகள் மற்றும் கொள்ளளவை கட்டியெழுப்புவதை உறுதி செய்வதற்காக அவ்வாறான கருத்திட்டங்களை அமுல்படுத்துகையில் பங்குடைமை, கூட்டுமுயற்சி மற்றும் உப ஒப்பந்தமயமாக்கல் ஊடாக உள்நாட்டு அமைப்புக்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.*

*நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை:*

*i.* *நிதி தொடர்பான சகல கலந்துரையாடல்களின் போதும் இந்தக் கொள்கையை உள்ளடக்குவதற்கு ஏற்றவகையில் நிதி, திட்டமிடல் மற்றும் வெளிவிவகார அமைச்சுடன் ஒருங்கிணைப்புப் பேணிவரப்படும்.*

*ii.* *உதவி வழங்குவோரின் நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற உள்நாட்டு முன்னுரிமையை தொடர்ச்சியாக பேணிவருவது உறுதி செய்யப்படும்.*

## 4.2 கைத்தொழில் துறையின் பொறுப்புக்கள் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறை

*தேசிய நிர்மாணக் கொள்கையின் அரசின் பொறுப்புக்களை பூர்த்தி செய்து, இணக்கப்பாடு, முகாமைத்துவம் மற்றும் செயலாற்றுகையின் போது கைத்தொழிலை வலுவூட்டுவது தொடர்பாக அதன் முக்கிய பல துறைகளில் தமக்கும் பொறுப்புக் காணப்படுவதை தனியார் துறையினர் புரிந்துகொள்ளல் வேண்டும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 14 – கொள்கை அபிவிருத்தியின் போது தனியார் துறையினரின் பங்கேற்பை ஊக்குவிக்கவும்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*i.* *கொள்கைசார் விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வினவுவதற்காக அரசினால் தாபிக்கப்பட்ட பொறிமுறைகளுக்கு சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் முனைப்புடன் பங்கேற்பதற்கும் பங்களிப்புச் செய்வதற்கும் தனியார் துறை ஊக்குவிக்கப்படும்.*

*ii.* *கைத்தொழிலில் தாக்கம் செலுத்துகின்ற அல்லது அதன் ஏற்புடையதன்மையை உறுதி செய்கின்றகொள்கைகளின் அபிவிருத்தி பற்றிய சிபாரிசைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தற்போது காணப்படுகின்ற அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள யாதாயினும் சட்டம் தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக மற்றும் அதன் ஏற்புடையதன்மையை உறுதி செய்வதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது, கைத்தொழிலுடன் சேர்த்து ஆலோசனைப் பொறிமுறையொன்றையும் தாபிக்கும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 15 – கைத்தொழிலினால் நிர்மாணக் கருத்திட்டங்கள் விளைதிறன்மிக்கவாறு முகாமைத்துவம் செய்யப்படுவதை ஊக்குவித்தல்.**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

*நிர்மாண வெளியீடுகளின்வினைத்திறன், தரம் மற்றும் உரிய நேரத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதை அடைந்து கொள்வதற்கு உகந்த பூகோள ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ பரீட்சயங்களைப் பயன்படுத்திக் கொள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களையும் ஊக்குவிக்கும்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 16 – கைத்தொழிலின் பங்காளர்களுக்கு இடையே நன்னடத்தைக் கோவையைத் தாபித்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

i. *தத்தமது தொழில்வாண்மை அமைப்புக்கள் ஊடாக தமது குழுக்களுக்கு நன்னடத்தைக் கோவை மற்றும் அங்கீகரிக்கத்தக்க பரீட்சயங்களைத் தயார் செய்து பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்ததாரர்கள், ஆலோசகர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள் மற்றம் அபிவிருத்தியாளர்களுடனான ஒருங்கிணைப்பு பேணிவரப்படும்.*

ii. *நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் உரிய கலைஞர்களுக்கு இடையே கைத்தொழில் தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமான ஆலோசனை மற்றும் நன்னடத்தைக் கோவையைத் தாபிப்பதற்கான ஆற்றலை ஏற்படுத்துவதற்காக கலைஞர்களின் மன்றங்களைத் தாபிக்க கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுவர்.*

iii. *அதற்கமைய, கைத்தொழில் தொடர்பான சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு இடையே நடவடிக்கைசார் தொடர்புகள் பற்றிய கைத்தொழிலின் தரநியமங்கள் தெளிவுபடுத்தி கைத்தொழில் விஸ்தரித்தல் நன்னடத்தை கோவையொன்றை அவர்கள் தயார்செய்வார்கள்.*

**நிர்மாணம் பற்றிய தேசியக் கொள்கை 17 – நிர்மாணக் கைத்தொழிலின் மனித வள அபிவிருத்தியை ஊக்குவித்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

i. *பயிற்றப்பட்ட ஊழியர்களின் குழுமத்தை விஸ்தரிப்பதற்காக அரசாங்கத்துடன் உகந்த கூட்டுமுயற்சிகளை ஒழுங்கு செய்வதன் ஊடாக மனித வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிக்கும்.*

ii. *நிபுணத்துவ மட்டத்திற்கு பயிலுனர்களுக்கான பயிற்சி போன்ற கட்டமைப்புசார் பிரவேச மட்டத்திலான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்க கைத்தொழிலை ஊக்குவித்தல்.*

iii. *பயிற்றப்பட்ட மற்றும் பகுதியளவில் பயிற்றப்பட்ட பயிலுனர்களான கலைஞர்களுக்கு கொடுப்பனவுடன் அல்லது கொடுப்பனவின்றி சேவைசார் பயிற்சிக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க கைத்தொழிலை ஊக்குவித்தல்.*

**நிர்மாணம் பற்றியக் தேசிய கொள்கை 18 – நிர்மாணக் கைத்தொழிலுக்கு உகந்த வழங்கல் பரீட்சயங்களைத் தாபித்தல்**

**அமுல்படுத்தும் பொறிமுறை**

i. *அரசின் மற்றும் தனியாரின் ஒப்பந்தங்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு சேவை வழங்குனர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு உகந்த தரநியமங்கள் மற்றும் பதிவைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.*

*ii.* *நியானமான போட்டித்தன்மை மற்றும் பெறுகைநடைமுறைகளை மேம்படுத்துவதற்கு கைத்தொழிலின் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் ஊக்குவிக்கப்படுவர்.*

*iii.* *உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புறக்கணிப்புச் செய்யும் கம்பனிகளுக்காகத் தாபிக்கப்பட்டுள்ள கண்காணிப்புப் பொறிமுறை ஊடாக கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.*

## 5.0 ஏனைய தொடர்புடைய அரசாங்கக் கொள்கைகள்

நிர்மாணிப்பு தொடர்பான தேசிய கொள்கையின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய கொள்கைகளுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை பங்கேற்பு ரீதியாக ஏற்றுக் கொள்வதும் தாபிப்பதும் அத்தியாவசியமாகும். கல்விக் கொள்கை, தேசிய வீடமைப்புக் கொள்கை, வீதி மற்றும் பெருந்தெருக்கள் துறையின் கொள்கை, நகர அபிவிருத்திக் கொள்கை, பௌதீக திட்டமிடல் கொள்கை, எரிசக்தித் துறையின் கொள்கை, நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்புக் கொள்கை, கரையோரப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் கொள்கை, நீர் வழங்கல் கொள்கை/ நீர்த்தேக்க முகாமைத்துவம் பற்றிய கொள்கை, துப்பரவேற்பாட்டுக் கொள்கை, தொழில் பயிற்சிக் கொள்கை, தேசிய தொழில் கொள்கை, அனர்த்த முகாமைத்துவக் கொள்கை, உள்ளூராட்சிக் கொள்கை, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய கொள்கை, முதலீட்டுக் கொள்கை/ பொருளாதாரக் கொள்கை மற்றும் தற்போது தாபிக்கப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் தாபிக்கப்படவுள்ள ஏனைய சம்பந்தப்பட்ட கொள்கைகள்.

## 6.0 – நிறைவு

இலங்கையின் தேசிய அபிவிருத்தியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நியாயமான, செலவின உற்பத்தித்திறன்மிக்க, சேவைகளை உரிய நேரத்திற்கு வழங்குகின்ற மற்றும் தரமான பண்புகளைக் கொண்டுள்ள வினைத்திறன்மிக்க நிர்மாணக் கைத்தொழிலானது தற்போது அத்தியாவசியமாக உள்ளது. தேசிய நிர்மாணக் கைத்தொழிலுக்கு வழிகாட்டல் மற்றும் அதனை அபிவிருத்தி செய்வதற்கு பூரணமாக ஒத்திசைகின்ற மற்றும் தெளிவான கொள்கையொன்று காணப்படுவது அரசின், கைத்தொழிலின் மற்றும் பொது மக்களின் நலனுக்குக் காரணமாக அமையும். நிர்மாணிப்பு தொடர்பான மேற்படி தேசிய கொள்கையானது இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

ல